DINAKARAN 21 FEB 09

# ஞானக் கண்



## சத்குரு சிறப்புக் கட்டுரை

பிரபஞ்சத்திலேயே மிகப்பெரிய இருப்பு எதுவென்று பார்த்தால், அது எங்கும் காணப்படும் பிரமாண்டமான வெற்றிடம்தான். இந்த வெறுமையிலிருந்தே எல்லாம் தோன்றுகின்றன. இந்த வெறுமையில்தான் எல்லாம் ஒடுங்குகின்றன. இதை நவீன விஞ்ஞானமும் இன்று ஒப்புக்கொள்கிறது. இந்த பிரமாண்டமான வெற்றிடத்தைத்தான் "ஷிவா" என்று சொல்கிறோம்.

எல்லா சமயங்களுமே, பரம்பொருள் என்றால், அனைத்து இடங்களிலும் நீக்கமற நிறைந்திருப்பது என்றுதான் சொல்கின்றன. இருளும், வெறுமையும் எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கின்றன. தங்களுக்கு நலவாழ்வு வேண்டும் என்று நினைப்பவர்கள் ஒளியைப் புனிதம் என்று போற்றுவதுண்டு. நலவாழ்வைக் கடந்து ஆன்மிகத்தில் கரைந்து போவதற்கான நாட்டம் ஏற்படுமென்றால் அவர்கள் இருளையே புனிதமென்று போற்றுவார்கள். மனமுதிர்ச்சி இல்லாதவர்கள்தான், இருளை அச்சமூட்டும் தீயசக்திகளுக்கு உரியதென்று கருதுவார்கள். இருள் என்பது எங்கும் நிறைந்திருக்கும் தெய்விகத்தின் குறியீடு. இருள் எந்த மூலத்திலிருந்தும் வருவதில்லை. அதற்கு எல்லையும் இல்லை. எனவே எல்லையில்லாத இருளின் பிடியில் உங்கள் குறுகிய எல்லைகளைக் கரைத்து விட கொடுக்கப்பட்டிருக்கும் வாய்ப்புதான் மஹாசிவராத்திரி. மஹாசிவராத்திரியன்று கோள்களின் அமைப்புமுறை, மனித உடலில் உள்ள சக்தி இயல்பாகவே மேல்நோக்கிச் செல்வதற்கு வாய்ப்பாக அமைகிறது. அந்த நாளில் முதுகுத்தண்டினை நேராக வைத்திருக்கும்போது இயற்கை உங்கள் சக்தி நிலையை மேல்நோக்கிக் கொண்டு செல்கிறது.

தன் சக்தி நிலையை மேல் நோக்கிக் கொண்டு செல்கிற போதுதான் மனிதன் தன் இயல்புகளின் உச்ச நிலையை அடைகிறான். படித்த மனிதர்கள் எல்லோருக்குமே ஐசக் நியூட்டன் புவியீர்ப்பு விசையைக் கண்டறிந்த கதை தெரியும். ஆப்பிள் பழம் கீழே விழுந்தது பற்றியே அனைவரும் பேசுகிறார்கள். ஆனால், செடியாக இருந்த அந்த ஆப்பிள் மரத்தை ஒரு சக்தி மேல் நோக்கி வளர்த்திருக்கிறதே அது குறித்து யாரும் பேசுவதில்லை. ஆத்ம சாதனை மேற்கொள்பவர்கள் தங்கள் சக்திநிலையை உச்சத்திற்குக் கொண்டு செல்ல இயலும். அதற்கு இயற்கையே உருவாக்கித் தரும் இணையற்ற வாய்ப்புதான் மஹாசிவராத்திரி.

மஹாசிவராத்திரி நாளில் ஈஷாவில் சிவமந்திர உச்சாடனங்கள் லட்சக்கணக்கானவர்களால் கூட்டாக மேற்கொள்ளப்படும். மந்திரம் என்றால், ஓர் அதிர்வு என்று புரிந்து கொள்வதே முக்கியம். அந்த அதிர்வுகள் உடல், மனம் ஆகிய குறுகிய எல்லைகளைத் தாண்டிய விடுதலையை உங்களுக்கு வழங்க வல்லவை. இந்த மந்திரங்களை வெறுமனே உதட்டளவில் உச்சரிப்பதை விட உங்கள் உடலில் உள்ள ஒவ்வோர் அணுவும் உச்சரிக்கும்போது அதன் தன்மையே அற்புதமாக இருக்கும்.

பழனி சுவாமிகள் என்றழைக்கப்பட்ட மகத்தான யோகியின் வாழ்வில் ஒரு சம்பவம் நடந்தது. தன் வாழ்வு முழுவதும் அவர் ''ஷம்போ'' என்கிற மந்திரத்தை இடையறாமல் உச்சரித்து வந்தார். இயற்கை உபாதைகளின் போது கூட அவர் "ஷம்போ" என்று உச்சரித்ததை உள்ளூர் கோயிலில் இருந்த பூசாரி ஒருவர் கேட்டுவிட்டு அதிர்ந்து போனார். இது போன்ற நேரங்களில் இறைவன் பெயரைச் சொல்வது மாசுபடுத்தும் செயல் என்று நினைத்து பஞ்சாயத்தைக் கூட்டினார். ''ஷம்போ'' என்ற மந்திரத்தை உச்சரிக்கக் கூடாது என்று பஞ்சாயத்தில் தடை விதித்தார்கள். பழனி சுவாமிகள் "ஷம்போ" உச்சாடனத்தை நிறுத்தினார். உடனே அந்த இடம் முழுவதும் "ஷம்போ" என்கிற மந்திரம் எதிரொலித்தது. அவரது உடல் முழுவதும் அந்த மந்திரத்தின் அதிர்வுகளை வெளிப்படுத்திக் கொண்டிருந்தது. அங்கிருந்த அனைவரும் அவரது திருவடிகளில் விழுந்து மன்னிப்புக் கேட்டனர். மந்திரத்தை உங்களுக்குள் ஊடுருவ விடுவீர்களேயானால் அதன் அற்புதத்தை உணர்வீர்கள்.

"த்ரியம்பகன்" என்பது சிவனின் திருநாமங்களில் ஒன்று. இது மூன்றாவது கண்ணைக் குறிக்கும். மற்ற இரண்டு கண்களும் புறக்கண்கள். பார்வையில் படும் குப்பைகளையெல்லாம் அவை மூளைக்கு புகட்டிக் கொண்டிருக்கின்றன. இதன் மூலமாக யாரையாவது பார்த்தால், பழைய அபிப்பிராயங்கள் உங்களுக்குள் புறப்படுகின்றன. இந்த இரண்டு கண்களும் உண்மையை பார்ப்பதில்லை. எனவே அறிதலுக்கென்றே சிவனின் மூன்றாவது கண் திறக்கிறது. அதுவே ஞானக்கண். இந்திய மரபில் அறிதல் என்பது படிப்பால் பெறுவதல்ல. புத்தகங்கள் தருவதல்ல. ஆழ்ந்த புரிதலையே அறிதல் என்கிறோம். இந்த மூன்றாவது கண் திறக்கிற போதுதான் சிவனை உணர்கிறீர்கள்.

இந்த மஹாசிவராத்திரித் திருநாள் அதற்கான வாய்ப்பை உங்களுக்கு மேலும் நெருக்கமாய் மலரச் செய்கிறது. இந்த நாளில் இரவு முழுவதும் முதுகுத்தண்டை நேர் நிலையில் வைத்திருப்பது மிக முக்கியமானது. ஈஷாவில் சக்திமிக்க மந்திர உச்சாடனங்களும், தியானங்களும், கலை நிகழ்ச்சிகளும் நிகழும். இந்த சக்தி மிக்க சூழலில், மஹாசிவராத்திரியை நீங்கள் விழித்திருக்கும் இரவாக மட்டும் பாராமல் விழிப்புணர்வின் இரவாகவும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதே என் ஆசியும், விருப்பமும்.

மஹாசிவராத்திரி
23.2.09